ஏலச்சீட்டின் விதிமுறைகள்

முதல் மாத தவணைக்கு ஏலம் இல்லை. அதை கம்பெனி எடுத்துக்கொள்ளும். இரண்டாவது ஏலத்தேதிக்கு முன்பே இரண்டாவது தவணைக்கான முழுத் தவணைத் தொகையையும் செலுத்திவிட வேண்டும்.

ஏலத் தேதி வாடிக்கையாளர்களுக்கு முன்னதாகவே கடிதம் மூலம் அறிவிக்கப்படும் அல்லது வாடிக்கையாளர்களின் வரவு புத்தகத்தில் ஏலத் தேதியின் விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

தவணைத் தொகை கட்டத் தவறிய அங்கத்தினர்களையும் மற்றும் இரண்டு, மூன்று தவணைகளை ஒன்றாக அந்த மாதம் கட்டிய அங்கத்தினர்களையும் ஏலத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

சந்தாதாரர்ள் ஏலத்தில் நேரிலும், டெண்டர் மூலாமகவும் அல்லது தனது சார்பில் அதிகாரக் கடிதமளிக்கப்பட்ட நபர் மூலமாகவும் கலந்து கொள்ளலாம். ஏலம் கோர யாரும் வராதிருந்தாலும், டெண்டர் இல்லையென்றாலும் நமது கம்பெனி விதிகளின்படி குறைந்த அளவு தள்ளுபடிக்கு குலுக்கலில் முடிவு செய்யப்படும்.

சீட்டு எடுக்காத வாடிக்கையாளர்கள் இடையில் பணம் கட்ட இயலாமல் போய் குரூப்பிலிருந்து விலக நேரிட்டால் அவர்கள் கட்டிய தவணைத் தொகையில் (கசர் லாபம் இல்லாமல்) கம்பெனியின் பிடித்தங்கள் நீக்கி மீதமுள்ள தொகையை சீட்டுக்காலம் முடிந்த பின்னரே பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லாமல் முன்னதாகப் பெற இயலாது.

ஒவ்வொரு மாதத்திலும் ஏலத் தள்ளுபடியில் ஏலம் கோரப்பட்ட தொகையில் இருந்து கம்பெனி கமிஷனாக சீட்டுத் தொகையில் 5% கமிசன் கழித்து மீதியை எல்லா சந்தாதாரர்களுக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்படும்.

சமத்தொகைக்கு ஏலத்தில் ஏலம் கோருபவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஏலம் கேட்டால் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.

அரசு விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏலம் நடைபெறாது. அடுத்த வேலை நாட்களில் ஏலம் நடைபெறும். மூன்று தவணைகளுக்கு மேல் பாக்கி இருந்தால் அந்தச் சந்தாதாரரை நீக்கிட கம்பெனிக்கு உரிமை உண்டு. வாரிசு தாரர் நியமனவசதி உண்டு.

சீட்டுத்தொகை பெறும் முறை

ஏலம் எடுத்த சந்தாதார்கள் மேற்கொண்டு கட்டவேண்டிய தொகைக்கு கீழ்க்கண்ட ஏதேனும் ஒன்று பொறுப்பாக கொடுத்து சீட்டுப்பணம் பெற்றுக் கொள்ளலாம்.

வீட்டு பத்திரம் அல்லது கிணறு மோட்டார் பம்பு செட் உள்ள தோட்டத்து பத்திரம் அல்லது பேங்க் கியாரண்டி லெட்டர் கொடுத்து தொகையை பெற்றுக் கொள்ளலாம்.

சீட்டுக்கு பின் கட்டவேண்டிய சந்தா தொகைகளுக்கு குறைவில்லாமல் மேற்கண்ட பொறுப்புக்களின் மதிப்பு கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

சந்தாதாரர் குடும்பத்தினர் அல்லாதவர்களின் சொத்துக்கள் பொறுப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏலச்சீட்டு நடைமுறை சேவை வரிகளுக்கு உட்பட்டது.





நிறுவனர்கள்

N. சாமிநாதன்

S. ராமதாஸ்

நிர்வாகக்குழு



MJF. Lion. R.பூபதி

நிர்வாக இயக்குனர்



Lion. R.A.ரமேஷ், B.Sc.,

நிர்வாக குழு தலைவர்

94436 21703



Lion.B.பாலசந்தர், B.E., B.L.,

இயக்குனர் - 99429 94524



Lion. B.கார்த்திக், B.E.,

மேலாளர் - 97511 58470

ஸ்ரீ ராமஜெயம் குழுமம்

ஸ்ரீ ராமஜெயம் டிரான்ஸ்போர்ட்
ராம்மீனா பைனான்ஸ்
ஸ்ரீ பைனான்ஸ்

தலைமுறைகளை தாண்டி நிற்கும் எங்கள் வளர்ச்சிக்கு வித்திட்ட
உங்களின் பேராதரவிற்கும், அன்பிற்கும்
எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்

உ

ஸ்ரீராமஜெயம்

SRJ CHITS SINCE 1971

CIN: U65991 TN1995 PTC033999

ஸ்ரீ ராமஜெயம்
சிட்ஸ் (பி) லிட்.,

தலைமை அலுவலகம் : வைரிசெட்டிப்பாளையம்
கிளை அலுவலகம் : துறையூர்

1971 - ஆம் ஆண்டு முதல் இன்று வரை
என்றும் வாடிக்கையாளர்களின் உண்ணதமான சேவையில்...

தலைமுறைகளைத் தாண்டிய நம்பிக்கை

04327 - 252248, 97897 41148, 99429 94524

www.sriramajayamchits.com sriramajayamchits@gmail.com





ஸ்ரீராமஜெயம்

சிட்ஸ் (பி) லிமிடெட்,

பேரன்பு கொண்ட வாடிக்கையாளர்களுக்கு வணக்கங்கள்

கடந்த 1971 - ஆம் ஆண்டு முதல் 1994- ஆம் ஆண்டு வரை ஸ்ரீராம் சிட்பண்ட்ஸ் (Reg.No.1/1971) என்ற பெயரில் இயங்கி வந்த நம் நிறுவனம், சீட்டுத்தொழிலை மிகச் சிறப்பாக நடத்தி வந்த எங்கள் முன்னோர்களின் அனுபவம், நேர்மை, நாணயம் முதலிய மூலதனங்களைக் கொண்டு 1995 - ஆம் ஆண்டு முதல் (1956 -ஆம் ஆண்டு கம்பெனிகள் பதிவுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு) **ஸ்ரீ ராமஜெயம் சிட்ஸ் (பி) லிட்.,** என்ற பெயரில் **திரு.ரா.பூபதி** அவர்களின் நிர்வாக திறமையால் சிறப்புடன் வளர்ந்து நிற்கின்றது.

பல தலைமுறைகளைத் தாண்டிய நம்பிக்கையோடு வளர்ந்து நிற்கும் எங்கள் வளர்ச்சிக்கு வித்திட்ட உங்களின் பேராதரவுடன் மேலும் உங்களின் தொழிலில் முன்னேற்றத்திற்காகவும், குடும்ப முன்னேற்றத்திற்காகவும், குழுந்தைகளின் கல்விக்காகவும், பிள்ளைகளின் திருமணத்திற்காகவும், எதிர்கால தேவைகளுக்காகவும் மேன்மேலும் உங்களுக்கான பணத் தேவைகளை எங்களின் நிறுவனத்தின் சேவையாகக் கொண்டு நீங்கள் எங்களிடம் சேமிக்கும் சீட்டின் மூலம் என்றும் உதவிக்கரம் நீட்டுவோம் என்பதனை நாங்கள் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் நிறுவனத்தின் கணக்கு புத்தகத்தில் நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் அச்சிடப்பட்டு இருக்கும். மேலும் வாடிக்கையாளர்கள் நிறுவனத்தின் ஏலச்சீட்டில் சேர்ந்ததற்கான குரூப்புகளின் (PSO) முன் ஒப்பளிப்பு ஆணை சான்றிதழும் மற்றும் (Agreement) உடன்படிக்கைச் சான்றிதழும் ஒட்டப்பட்டு இருக்கும். இது நமது நிறுவனத்தின் மேலும் ஒரு சிறப்பாக வாடிக்கையாளர்களுக்கு அமைந்திருக்கின்றது.

நீண்ட கால சீட்டு குரூப்புகள்

சீட்டுத் தொகை ரூ.	மாதங்கள்	கட்டவேண்டிய தொகை ரூ.			ஏல உச்ச வரம்பு
		மாதம்	வாரம்	தினம்	
25,00,000	40	62,500	15,625	2090	40%
20,00,000	40	50,000	12,500	1670	
10,00,000	40	25,000	6,250	840	
5,00,000	40	12,500	3,125	420	
3,00,000	40	7,500	1,875	250	
2,00,000	40	5,000	1,250	170	

குறுகிய கால சீட்டு குரூப்புகள்

சீட்டுத் தொகை ரூ.	மாதங்கள்	கட்டவேண்டிய தொகை ரூ.			ஏல உச்ச வரம்பு
		மாதம்	வாரம்	தினம்	
25,00,000	25	1,00,000	25,000	3340	30%
20,00,000	25	80,000	20,000	2670	
15,00,000	25	60,000	15,000	2000	
10,00,000	25	40,000	10,000	1340	
5,00,000	25	20,000	5,000	670	
3,00,000	20	15,000	3,750	500	
2,00,000	20	10,000	2,500	340	
1,00,000	20	5,000	1,250	170	

மிக குறுகிய கால சீட்டு குரூப்புகள்

சீட்டுத் தொகை ரூ.	மாதங்கள்	கட்டவேண்டிய தொகை ரூ.			ஏல உச்ச வரம்பு
		மாதம்	வாரம்	தினம்	
10,000	10	1,000	250	35	25%
30,000	10	3,000	750	100	
50,000	10	5,000	1,250	170	
1,00,000	10	10,000	2,500	335	
2,00,000	10	20,000	5,000	670	



முற்றிலும் கம்யூட்டர் மயமாக்கப்பட்ட சீட்டு நிதி நிறுவனம்



உறுப்பினர் சேர்க்கை

சீட்டுகளில் சேர விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பத்தாளை பூர்த்தி செய்து, முதல் தவணைத் தொகையை ரொக்கமாகவோ, காசோலை அல்லது டிராப்ட் மூலமாகவோ செலுத்தி உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளலாம். 18-வயது நிரம்பிய அனைத்து இந்தியக் குடிமக்களும் உறுப்பினராகலாம்.

வியாபாரிகள், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், விவசாயிகள், லாரி உரிமையாளர்கள், டாக்டர்கள், இன்ஜினியர்கள் எனப் பலதரப்பட்ட மக்களும் நம் நிறுவனத்தில் சேர்ந்து பயனடையலாம். வாடிக்கையாளர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும் உரிமை நிர்வாகத்தின் முடிவுக்கு உட்பட்டது.

தவணைத்தொகை செலுத்தும் முறை:

தினசரி வசூல், வார வசூல் மற்றும் மாத வசூல் ஆகிய மூன்று முறையிகளில் தவணைத் தொகையினைச் செலுத்தலாம். சந்தாதாரர் மேற்கண்ட மூன்று முறைகளில் விரும்பியதை முன்னரே தெரிவித்து அதற்கான கணக்குப்புத்தகத்தை பெற்று கொண்ட பின்னரே வசூல் செய்யப்படும்.

வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும், ஏலத் தேதி, தவணைத் தொகை, தவணைத் தொகை செலுத்த வேண்டிய தேதி ஆகிய விவரங்கள் அடங்கிய அறிவிப்பு கடிதங்கள் மூலமாகவும் அல்லது E.mail மூலமாகவும் அல்லது SMS மூலமாகவும் வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்தப்படும்.

கடிதங்கள், E.mail மற்றும் SMS மூலமாக அனுப்பப்படும் விவரங்கள் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்காமல் இருப்பதோ அல்லது தாமதமாக கிடைப்பதோ தவணைத் தேதிக்குள் தவணை செலுத்த தவறுவதற்கு ஒரு காரணமாக ஏற்கப்படமாட்டாது.

காசோலையாகவும், ரொக்கமாகவும் தவணைத் தொகையை செலுத்தலாம். காசோலையாக செலுத்திய தவணைத் தொகை நிறுவனத்தின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னரே உறுப்பினர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

மூன்றுக்கும் மேற்பட்ட தவணைகளை தாமதமாக செலுத்தும் நபர்கள் அதற்குண்டான அபராத தொகையையும் சேர்த்து கட்டாயம் செலுத்த வேண்டும். சீட்டுக்காலம் முடிவுரும்வரை குறிப்பிட்ட தேதியிலோ அல்லது முன்னரோ தவறாமல் சந்தா செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு சீட்டுத் தொகையில் 1% சிறப்பு (போனஸ்) பரிசுத் தொகை வழங்கப்படும்.

கம்பெனி ரசீது இல்லாமல் கொடுக்கும் பணத்திற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது.